1982 மார்ச் 25]

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, உதாரணத்திற்கு நான் ஒன்றைச் சொல்கிறேன். எண் 617, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வண்டி திருவண்ணாமலையிலிருந்து கோவைக்குச் செல்லுகிறது. திருவண்ணாமலையிலிருந்து கோவைக்குச் செல்லும்போது லாபத்தில் செல்லுகிறது. பகலில் திரும்பும்போது கொஞ்சம் நஷ்டம் ஏற்படுகின்றது என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட வழித் தடங்களைத்தொடர்ந்து நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, போகும்போது லாபம்; வரும்போது நஷ்டம் என்று சொன்னாலும், ஒட்டுமொத்தமாக நஷ்டமாக இருக்கும். எனவே, அதற்கு வேறு வழி செய்ய முடியாது, அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் இந்தத் தனியான பாதையைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே என்ன விவரம் என்பதைப் பார்த்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

சென்னை—தூத்துக்குடி தோணிப் போக்குவரத்துத் திட்டம்.

வினா எண் 662—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

போக்குவரத்து நெரிச்சலைக் குறைப்பதற்கு சென்னைக்கும் தூத்துக்குடிக்கும் இடையே கடலோரத் தோணிப் போக்குவரத்து வசதி செய்யுமாறு மத்திய அரசை வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 6வது ஐந்தாண்டு திட்டத்தில் சென்னைக்கும் தூத்துக்குடிக்குமிடையே கடலோரப் போக்குவரத்தை மத்திய அரசு திட்டமாக மேற்கொள்ளுமாறு இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது. இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக கடலோரப் போக்குவரத்தைப் பற்றி ஒரு ஆராய்ச்சியை இந்திய அரசு நடத்தி வருகிறது. அது முடிந்த பிறகு மேற்கொண்டு பதிலளிப்பதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இருந்து தென் மாவட்டங்களுக்கு தூத்துக்குடி வரையில் இரவிலே காரிலே செல்லுகின்றபோது, எதிரிலே லாரிகளும், பேருந்துகளும் ஹெட் லைட்டைத் தொடர்ந்து போடுகிறார்கள். அதனாலே விபத்துகள் ஏற்பட்டு, உயிர் நஷ்டம் ஏற்படுகிறது. அதனால், மாநில சர்க்கார் மத்திய சர்க்காரிடம் வற்புறுத்திச் சொல்லி, கடலோரப் பகுதியில் போக்குவரத்தை அமைக்கின்ற வகையில், அதிலே நாமே பூம்புகார் கழகத்தின் மூலம், ஜெர்மன் கப்பல் போன்ற உயர்ந்த விலையில் வாங்காமல், வேறு கப்பல்களை வாங்குவதற்கு.........

[1982 மார்ச் 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, தோணியைப் பற்றியது. அதைப் பற்றி மட்டும் கேளுங்கள்.

திரு. து. புருஷோத்தமன் : ஆகவே, இந்தத் திட்டத்தை விரைவாக அமுல்படுத்துவதற்கு மாநில சர்க்கார், மத்திய சர்க்காரை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, பேருந்துகள் எல்லாம் ஹெட் லைட்டைப் போட்டு ஓட்டுவதாகச் சொன்னார்கள். இரவிலே லைட் இல்லாமல் ஓட்ட முடியாது என்பது தெரியும். ஜாக்கிரதையாகப்போகவேண்டும். அது மட்டுமல்ல. கப்பலைப் பற்றிச் சொன்னார்கள். காகிதக்கப்பலை நாம் விட முடியாது. நீங்கள் பயணம் செய்கின்ற முறையில் கப்பலை விட வேண்டும். அந்த வகையில் அதற்குத் தேவையானவற்றை மாநில சர்க்கார், மத்திய சர்க்காரை, இந்த போக்குவரத்தைப் பற்றி தீவிரமாக நடவடிக்கை எடுக்கும். நாங்கள் தயக்கம் காட்ட மாட்டோம்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, காகிதக் கப்பலுக்கு விலை இல்லை என்பது அமைச்சருக்குத் தெரியும் என்று கருதுகிறேன். இப்போது சென்னையிலே இருக்கின்ற சால்ட் குவாட்டர்ஸ், இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள பல்வேறு இடங்களிலிருந்து சரக்குகள் வருகின்ற இடம். அங்கே போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, அதை அம்பத்தூருக்கு மாற்றுவதற்கு மத்திய சர்க்காரிடம் திட்டமிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதைத் துரிதப்படுத்தவேண்டும். இல்லையெனில், இன்னும் இரண்டாண்டுகளுக்குப் பிறகு அங்கே செல்ல முடியாத அளவுக்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தை விரைவாக அமுல்படுத்த, இதை அம்பத்தூருக்கு மாற்றுவதற்கு மத்திய சர்க்காரை மாநில சர்க்கார் வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10–00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியோடு இது தொடர்புடையது அல்ல. போக்குவரத்து என்றவுடனே எல்லாக்கேள்விகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இது என்ன என்பதைப் பார்த்து நாம் எழுதியிருக்கிறோமா என்பதைப் பார்த்து தான் பதில் சொல்லமுடியும்.

THIRU K.S.G. HAJA SHAREEF : Mr. Speaker Sri, will the Government Con.ider the feasibility of o ganising or coastal passanger service emanting from Madras touching Pondicheery, Vu aline Nagapatnam and Tutiqurin if it would work in a profibable manner?

1982 மார்ச் 25]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : இதையெல்லாம் தான் மத்திய அரசாங்கத்திற்கு நாம் எழுதியிருக்கிறோம். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் காட்டுகிற ஆர்வத்தை பார்த்தால் அவர்கள் நமக்குக்கொஞ்சம் ஆதரவாகச் சொன்னால் அது உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பழனி வட்டத்திலுள்ள ஆடுவளர்ப்பு கூட்டுறவு சங்கங்கள்.

* வினா எண். 663—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி வட்டத்தில் ஆடு வளர்ப்பு கூட்டுறவு சங்கம் எத்தனை இயங்குகிறது ?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த இடங்களில் ?

(இ) அரசு செய்யும் உதவி என்ன ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) பழனி வட்டத்தில் 16 ஆடு வளர்ப்புக்கூட்டுறவுச் சங்கங்கள் இயங்குகின்றன.

(ஆ) அவை கீழ்க்கண்ட இடங்களில் இயங்குகின்றன :

(1) பெரிய களம்புத்தூர், (2) அய்யம்புலி கரும்பப்பட்டி, (3) கீரனூர், (4) புளியம்பட்டி, (5) ஆயக்குடி, (6) காட்டுப்பட்டி, (7) கணக்கன்பட்டி, (8) கேதையிரும்பு, (9) அப்பியப்பாளையம், (10) புங்கமுத்தூர், (11) அம்பிளிக்கை, (12) கரியாம்பட்டி, (13) எஸ். அத்திக்கோம்பை, (14) பெத்தேல்புரம், (15) ஓடைப்பட்டி, (16) கே. அத்திக்கோம்பை.

(இ) அரசு செய்யும் உதவி பின்வருமாறு—கூட்டுறவு சங்கங்களின் அங்கத்தினர்களுக்குக் கால்நடை மருத்துவர்கள் கால்நடை பராமரிப்பு, சுகாதாரம் சம்பந்தமான அறிவுரைகள் அவ்வப்போது வழங்கியும் ஆடுகளுக்கு நோய் சம்பந்தமான சிகிச்சை முறைகள் செய்தும் குடல் புழுக்களுக்கு பூச்சி மருந்துகள், தடுப்பு முறைகள் கையாண்டும் ஆடுகளுக்குத் தொற்று நோய்கள் வராது தடுப்பு ஊசிகள் போட்டுப் பாதுகாப்பு முறைகள் செய்தும் அவ்வப்போது இலாகா அலுவலர்கள் பராமரிப்பு சம்பந்தமாக அறிவுரைகள் கூறியும் உதவி செய்தும் வருகிறார்கள். சங்கத்தின் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் 20 பெண் செம்மறி ஆடுகளும் 1 ஆண் செம்மறி ஆடும் கொண்ட மந்தை ஒன்று வாங்குவதற்கு 3,500 ரூபாய் முதல் 4,000 ரூபாய் வரை தேசியமய